**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.59/2024 - PW-7**

| | |
|---|---|
| Name | திரு. பகவான் |
| Husband/Father Name | மணி |
| Village /Area | மின்னல் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | தனியார் நிறுவன பொறியாளர் |
| Age | 29 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 22.09.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இறந்த பஸ்வான் என்னுடைய அண்ணன் ஆவார். 28.06.2021 அன்று நான் பணியிலிருந்த போது எனது தம்பி எனக்கு போன் செய்து மதியம் 2.30 மணியளவில் அண்ணன் பஸ்வானை மேலாவதத்தை சேர்ந்த நபர்கள் மேலாவதம் பெட்ரோல் பங்க் அருகே அடித்து கொலை செய்து விட்டதாக சொன்னார். நான் இரு சக்கர வாகனத்தில் சென்னையிலிருந்து சம்பவம் நடந்த இடத்திற்கு மாலை 4.30 மணிக்கு வந்தேன். அப்போது எங்கள் வீட்டில் கூட்டமாக இருந்தார்கள். எங்கள் அண்ணன் பஸ்வான் உடலை பார்க்கலாம் என்று கேட்ட போது எங்கள் அண்ணன் உடலை அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டதாக கூறினார்கள். அதன் பிறகு அரக்கோணம் கிராமிய காவல் நிலையத்திற்கு நான், என் தந்தை மற்றும் தாயார் புகார் கொடுக்க சென்றோம் நான் எழுதிய புகாரை தான் என் அப்பா காவல்

நிலையத்தில் கொடுத்தார். 28ம் தேதி மதியம் எனது அண்ணனை மின்னலை சேர்ந்த வினோத் த/பெ.ரகு என்பவர் அன்வர்திகான்பேட்டை திருமணத்திற்கு செல்வதற்கு அழைத்துச் சென்றதாக கூறினார். அப்போது அவர்களுடன் பரத் என்பவர் உடன் சென்றதாக கூறினார். மேலும் மேலாவதம் மற்றும் அன்வர்திகான்பேட்டை மதுபானக் கடையில் எனது அண்ணனுக்கும் மதுபானக் கடை விற்பனையாளருக்கும் தகராறு ஏற்பட்டதாக போலீசார் எங்களிடம் கூறினார். எனது அண்ணனை அன்பரசு, சூரியமூர்த்தி, ரஞ்சித், சிவா, விக்னேஷ், புஜ்ஜி ஆகியோர்கள் தான் என் அண்ணனை அடித்து கொன்றதாக கூறினார்கள். வினோத் த/பெ.ரகு என்பவர் என் அப்பாவிடம் வந்து எனது அண்ணனை கொன்று விட்டதாக கூறாமல் ஏதோ பிரச்சனை நடப்பதாக கூறியுள்ளார். பிறகு மேற்படி வினோத் தான் எனது அப்பாவை அவருடைய இரு சக்கர வாகனத்தில் அழைத்துச் சென்றார். மின்னல் அருகேவுள்ள ஆலமரம் ஊரில் எனது அப்பாவை இறக்கிவிட்டு விட்டு மேலும் இரு சக்கர வாகனத்தை எடுத்துச் சென்று விட்டதாக கூறினார். பிறகு எனது அப்பா இந்திரா காந்தி குடியிருப்பிலிருந்த வேறொரு நபரின் இரு சக்கர வாகனத்தில் சம்பவ இடத்திற்கு சென்றதாகவும் எனது தந்தை சென்று பார்த்த போது என் அண்ணன் வெட்டு காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்ததாக சொன்னார். என் அண்ணனின் உடலை வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனையில் பிரேத விசாரணை முடித்து இறுதி சடங்கிற்காக வீட்டிற்கு எடுத்து வந்தோம். இது சம்பந்தமாக அரக்கோணம் கிராமிய காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

எனது அண்ணன் பஸ்வான் இறந்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும் நான் சம்பவத்தை கேள்விபட்டதன் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நேரடியாக நான் சம்பவத்தை பார்க்காததால் யார் யாருக்கு பிரச்சனை ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நாங்கள் புகார் கொடுக்கும் போது இரவு 9.30 மணி இருக்கும். உதவி ஆய்வாளர் சீனுவாசன் எழுதி வைத்திருந்ததை தான் நான் புகாரில் எழுதினேன். நான் போலீஸ் விசாரணையில் வினோத் என் அப்பாவிடம் பஸ்வான் இறந்த விஷயத்தை கூறவில்லை என்றும் ஏதோ பிரச்சனை நடந்ததாகவும் அதன் அடிப்படையில் எனது தந்தையை அழைத்துச் சென்றதாக கூறினேனா என்றால் ஆமாம். மின்னல் அருகேவுள்ள ஆலமரம் ஊரில் எனது அப்பாவை இறக்கிவிட்டு விட்டு மேலும் இரு சக்கர வாகனத்தை எடுத்துச் சென்று விட்டதாக கூறினார். பிறகு எனது அப்பா இந்திரா காந்தி குடியிருப்பிலிருந்த வேறொரு நபரின் இரு சக்கர வாகனத்தில் சம்பவ இடத்திற்கு சென்றதாகவும் என்னிடம் கூறிய விவரத்தை போலீஸ் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். போலீஸ் விசாரணையில் நான் கடந்த 2016 ம் ஆண்டு மேலாவதத்தை சேர்ந்த லோகேஷ் என்பவரை மணி, பஸ்வான், அஜித், வினோத் மற்றும் ரகு ஆகியோர் குத்தி கொலை செய்ததாகவும் அதனால் ஆவதம் காலனிக்கும் அவர்களுக்கும் முன்விரோதம் இருந்ததாக கூறியிருந்தேனா என்றால் இல்லை. அவ்வாறு கூறியுள்ள விவரம் நான் கூறியதில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்றும் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை போலீசார் சொல்லி கொடுத்ததன் அடிப்படையில் தான்

கூறினேன் என்றால் சரியல்ல. எனது தந்தை கூறியதன் அடிப்படையில் தான் கூறினேன்.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.23 18:13:58 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.